# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் : 06 | வரலாறு<br>சுட்டெண் : ........................................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி - I

- **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. கி.பி நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலங்கை வரலாற்றினை அறிய உதவும் இலக்கியம்
   1) மகாவம்சம் 2) சூளவம்சம் 3) தீபவம்சம் 4) போதிவம்சம்

2. சாலி வாகன சகாப்தம் என்ற நாட்காட்டியுடன் தொடர்புடைய மதம்
   1) இந்து மதம் 2) பௌத்த மதம் 3) இஸ்லாம் மதம் 4) கிறிஸ்தவ மதம்

3. முதன்முதலில் மர அட்டை தரையில் தோன்றிய யுகம்
   1) பெரும்பனி யுகம் 2) சிலூரியன் யுகம்
   3) ஹொலோசிக் யுகம் 4) பிளைத்தோசின் யுகம்

4. மத்திய தரைக்கடல் பிரதேசத்தில் முதன்முதல் பயிரிடப்பட்ட தானியம்
   1) நெல் 2) சோளம் 3) திணை 4) கோதுமை

5. முதன்முதலில் நெருப்பினை உபயோகித்த மனிதவர்க்கம்
   1) ஒஸ்ரலோ பிதிகஸ் 2) ஹோமோ ஹெபிலஸ்
   3) ஹோமோ சேபியஸ் 4) ஹோமோ இரெக்டஸ்

6. "ஹமுராபி" என்ற உலகின் மிகப் பழைய சட்டநூலை அறிமுகப்படுத்திய நாகரிகம்
   1) மொசப்பத்தேமியா நாகரிகம் 2) சிந்துநதி நாகரிகம்
   3) எகிப்திய நாகரிகம் 4) சீன நாகரிகம்

7. தங்கத்திலான முகமூடியைக் கொண்ட மம்மிக்குச் சொந்தமான மன்னன்
   1) அமுராபி 2) கில்கமேஹ் 3) துட்டன்காமன் 4) அகனெட்டான்

8. முதன்முதலில் இறப்பர்ப் பந்தினை அறிமுகம் செய்தவர்கள்
   1) நைல்நதி நாகரித்தவர் 2) மாயா நாகரிகத்தவர்
   3) குவாங்கோநதி நாகரிகத்தவர் 4) சிந்துவெளி நாகரிகத்தவர்

9. விஜயனது வருகை பற்றிக் கூறுகின்ற இலக்கிய ஆதாரம்
   1) மகாவம்சம் 2) தீபவம்சம் 3) சூளவம்சம் 4) போதிவம்சம்

10. இயக்கர் குழுவினர் இலங்கையில் வாழ்ந்த நகரங்கள்
    1) சிறிசவத்து, உபதிஸ்ஸகம 2) அநுராதகம, உபதிஸ்ஸகம
    3) சிறிசவதத்து, லங்காபுர 4) மகாகம, லங்காபுர

11. இலங்கையினை ஆட்சி புரிந்த முதலாவது சிங்கள மன்னன்
    1) விஜயன் 2) பண்டுகாபயன்
    3) மூத்தசிவன் 4) தேவநம்பியதிஸ்ஸன்

12. தேவநம்பியதிஸன் மகிந்ததேரரைச் சந்தித்த இடம்
    1) மிகிந்தலை 2) சிகிரியா 3) அநுராதபுரம் 4) தம்புள்ள

13. புத்தரின் வலது தாடை எலும்பு வைத்து அமைக்கப்பட்ட விகாரை
    1) ருவன்வெலிசாய 2) அபயகிரி 3) ஜேதவனராமய 4) தூபராம

kalvi.lk

14. சங்கமித்தையும் குழுவினரும் இலங்கையில் வந்திறங்கிய இடம்
   1) கோகர்ண  2) ஜம்புகோளப்பட்டினம்
   3) சூரகதித்த  4) மகாதீர்த்த

15. துட்டகைமுனு மன்னனின் படையும் எல்லாளனின் படையும் முதன்முதலில் போர் செய்த இடம்
   1) அநுராதபுரம்  2) மாந்தை  3) பொலன்னறுவை  4) மகியங்கனை

16. வலகம்மா மன்னனது தந்தை பெயர்
   1) சத்தா திஸன்  2) தூலதத்தன்
   3) லஞ்சதிஸ்ஸ  4) கல்லாடநாகன்

17. சுரங்கவழிக் கால்வாய் முறையை அறிமுகப்படுத்திய மன்னன்
   1) பண்டுகாபயன்  2) வசபன்  3) மகாசேனன்  4) வலகம்பா

18. மின்னேரித் தெய்வம் எனப் போற்றப்பட்ட மன்னன்
   1) தாதுசேனன்  2) வசபன்  3) மகாசேனன்  4) வலகம்மா

19. புராதனக் காலத்தில் அமைக்கப்பட்ட தூபிகளுள் உலகில் விசாலமான செங்கல் தூபியாக விளங்குவது
   1) ஜேதவனராமய  2) அபயகிரி  3) தூபராம  4) ருவன்வெலிசாய

20. தாதுசேன மன்னனால் அமைக்கப்பட்ட குளங்களில் ஒன்று
   1) மகா விலாச்சியா  2) அபயவாவி
   3) கலாவாவி  4) பராக்கிரம சமுத்திரம்

(20×2=40 புள்ளிகள்)

## பகுதி - II

- **முதலாம் வினா உட்பட விரும்பிய ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) அ. 1) மூன்றாம் தவணையில் வரலாற்றுப் பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீடு எது? (01 புள்ளி)
   2) இக்கணிப்பீடு மேற்கொண்ட பாட அலகு எது? (02 புள்ளி)
   3) இக்கணிப்பீட்டிற்காக நீர் பயன்படுத்திய தரஉள்ளீட்டுப் பொருட்கள் இரண்டு தருக. (02 புள்ளி)

   ஆ. தரப்பட்ட உலகப் படத்தில் ஆங்கில எழுத்துக்களால் குறித்துக் காட்டப்பட்ட இடங்களைப் பெயரிடுக.
   1. மெக்சிக்கோ  2. பாக்குநீரிணை  3. சீனா
   4. எகிப்திய நாகரிகம்  5. அவுஸ்திரேலியா (05 புள்ளி)

02) 1. இலங்கையின் வரலாற்றினைக் கற்பதற்கு உதவும் இலக்கிய மூலாதாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளி)
   2. வரலாற்றைக் கற்பதன் மூலம் பெறும் பயன்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளி)
   3. i) கிறிஸ்து ஆண்டின் வகைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளி)
      ii) பின்வரும் ஆண்டுகளின் அளவீட்டு முறைகளைக் குறிப்பிடுக.
         a) பௌத்த ஆண்டு
         b) சாலிவாகன சகாப்தம்
         c) ஹிஜ்ரி ஆண்டு (03 புள்ளி)

03) 1. பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற யுகங்களைக் குறிப்பிடுக.
   1. மரவட்டை தோன்றிய யுகம்
   2. தாவரங்கள் தோற்றம் பெற்ற யுகம்
   3. மனிதரின் பரிணாம வளர்ச்சி ஏற்பட்ட யுகம் (03 புள்ளி)

kalvi.lk

2. பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய மனித பரிணாம இனங்களைக் குறிப்பிடுக.
   i) மனித நிலையினை அடைந்த வானரம்
   ii) ஆற்றலுடைய மனிதன்
   iii) செயற்பாடுகள் செய்த மனிதன் (03 புள்ளி)

3. புதிய கற்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளி)

04) 1. பின்வரும் நதிக்கரையோரங்களில் தோற்றம் பெற்ற உலகின் புராதன நாகரிகங்களைப் பெயரிடுக.
   i) யூப்ரடீஸ் தைகிரீஸ் ii) சிந்து நதி iii) நைல் நதி (03 புள்ளி)

2. பின்வருவனவற்றுடன் தொடர்புடைய விடயங்களைக் குறிப்பிடுக.
   i) உலகில் மிகப் பழைய இலக்கிய நூல்
   ii) மம்மி முறையினை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள்
   iii) சிந்துவெளி நாகரிகத்தில் காணப்பட்ட துறைமுகம் (03 புள்ளி)

3. i) சிந்துவெளி நாகரிக மக்கள் பயன்படுத்திய உலோகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளி)
   ii) எகிப்திய நாகரிகத்தால் உலகிற்குக் கிடைத்த கொடைகள் இரண்டு தருக. (02 புள்ளி)

05) 1. ஆதிகால மக்கள் தமது உணவிற்காக வேட்டையாடிய உயிரினங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளி)

2. விஜயனது குழுவினரால் அமைக்கப்பட்ட குடியிருப்புக்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளி)

3. i) விஜயன் வரும்போது இலங்கையிலிருந்த இரு வகையான மக்கள் கூட்டத்தினரைக் குறிப்பிடுக. (02 புள்ளி)
   ii) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடையவைகளைக் குறிப்பிடுக.
      a) விஜயனைப் பற்றி அறிய உதவும் இலக்கியம்
      b) விஜயன் வருகைக்கு முன்னர் வீடுகளை வேயப் பயன்படுத்திய புற்கள்
      c) விஜயன் திருமணம் செய்த சத்திரியகுலப் பெண் (03 புள்ளி)

06) 1. இலங்கைக்கு வெளிநாட்டவர்கள் வழங்கிய பெயர்கள் மூன்று தருக. (03 புள்ளி)


2. பின்வரும் விடயத்துடன் தொடர்புடையவைகளைக் குறிப்பிடுக.
   i) பண்டுகாபய மன்னனுக்கு கல்வி போதித்த குரு
   ii) தேவநம்பியதீசனின் தந்தை பெயர்
   iii) இலங்கையின் முதலாவது பிக்குனி (03 புள்ளி)

3. i) மகிந்ததேரருடன் இலங்கைக்கு வருகைதந்த குழுவில் அங்கத்துவம் பெற்றிருந்த இருவரைக் குறிப்பிடுக. (02 புள்ளி)
   ii) துட்டகைமுனு மன்னனால் அமைக்கப்பட்ட விகாரைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளி)

07. A. 1. வசப மன்னால் கட்டப்பட்ட குளங்கள் மூன்றினைத் தருக. (03 புள்ளி)
   2. பின்வரும் விடயங்களுடன் தொடர்புடையவற்றைத் தருக.
      i) இலம்பகர்ண வம்சத்து முதல் மன்னன்
      ii) தென்னிந்திய படை எடுப்பின் போது வலகம்பா மன்னனுக்குப் பாதுகாப்பளித்தவர்
      iii) புத்த பிக்குகளுக்கு தானமாக காவியுடைகளை வழங்கிய மன்னன் (03 புள்ளி)

B. 1. அநுராதபுர காலத்தில் கட்டப்பட்ட கால்வாய்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளி)
   2. வசம்ப மன்னனின் வாழ்விலிருந்து நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினை இரண்டினைத் தருக. (02 புள்ளி)

kalvi.lk



Education kalvi අධ්‍යාපන

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

**Whatsapp**
**075 287 1457**